| MSSRF Science for Sustainable Development | வானிலை சார்ந்த வேளாண் ஆலோசனை அறிக்கை<br>இணைந்து வழங்குபவர்கள்<br>பிராந்திய வானிலை மையம் சென்னை - இந்திய வானிலைத் துறை<br>ம. சா. சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம் மற்றும்<br>ரெட்டியார்சத்திரம் விதை உற்பத்தியாளர்கள் சங்கம் | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | மாவட்டம் : | மதுரை | காலம் : | 20/12/2023 | முதல் | 24/12/2023 |
| | அறிக்கை எண் : | 101/ 2023 | வெளியீட்டு நாள் : | | 19/12/2023 | |

### மதுரை மாவட்டத்தின் கடந்த வார வானிலை

பெரும்பாலான பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலை 30°- 33° செல்சியஸ் ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 23° - 25° செல்சியஸ் ஆகவும் பதிவானது. மேலும் மழை பெறப்பட்டது.

| கடந்தவார வானிலை (14.12.2023 முதல் 18.12.2023) | | | | | | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு – 24-12-2023- 08.30 வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 14/12 | 15/12 | 16/12 | 17/12 | 18/12 | தேதி | நாள்-1 20/12 | நாள்-2 21/12 | நாள்-3 22/12 | நாள்-4 23/12 | நாள்-5 24/12 |
| 0.0 | 0.0 | 0.0 | 1.2 | 28.3 | மழை (மி.மீ) | 12 | 4 | 6 | 0 | 0 |
| 31 | 33 | 31 | 30 | 30 | அதிக பட்ச வெப்பநிலை (செல்) | 25 | 24 | 23 | 24 | 24 |
| 21 | 24 | 23 | 25 | 23 | குறைந்த பட்ச வெப்பநிலை (செல்) | 23 | 23 | 22 | 23 | 23 |
| 4 | 5 | 6 | 8 | 8 | மேக மூட்டம் (ஆக்டா) | 7 | 4 | 7 | 4 | 6 |
| 79 | 67 | 83 | 85 | 95 | அதிக மற்றும் குறைந்த பட்ச காற்றின் ஈரப்பதம் (சதவீதம்) | 90 | 90 | 90 | 90 | 90 |
| 54 | 70 | 83 | 89 | 90 | | 80 | 70 | 60 | 50 | 70 |
| 15 | 14 | 8 | 8 | 6 | காற்றின் வேகம் (கி.மீ/மணி ) | 12 | 10 | 10 | 10 | 12 |
| வட கிழக்கு | வட கிழக்கு | வட கிழக்கு | வட கிழக்கு | வட கிழக்கு | காற்றின் திசை | வட கிழக்கு | வட கிழக்கு | வட கிழக்கு | வட கிழக்கு | வட கிழக்கு |

### குறுஞ்செய்தி :

மாவட்டத்தின் ஒரு சில இடங்களில் டிசம்பர் 20 தேதி மிதமான மழையும் மற்றும் 21, 22 தேதி லேசான மழைக்கு வாய்ப்புள்ளது. அதிகபட்ச வெப்பநிலையானது 23°-25° செல்சியஸ் ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலையானது 22°-23° செல்சியஸ் ஆகவும் பதிவாகலாம். வானம் பொதுவாக மேகமூட்டத்துடன் காணப்படும். மணிக்கு 10 முதல் 12 கி.மீ வேகத்தில், வடகிழக்கு திசையிலிருந்து காற்று வீசக்கூடும்.

### பொது ஆலோசனை:

தொடர்ந்து மேக மூட்டத்துடன் கூடிய ஈரப்பதமான வானிலை நிலவுவதால் விவசாயிகள் ஒரு ஏக்கருக்கு 10-15 என்ற எண்ணிக்கையில் மஞ்சள் ஒட்டும்பொறி அட்டைகளை வைத்து சாறு உறிஞ்சும் பூச்சிகளின் நடமாட்டத்தைகண்காணிக்கவும்.

அடுத்த 5 நாட்களுக்கு மணிக்கு 10 முதல் 12 கி.மீ. வேகத்தில் காற்று வீசும் என எதிர்பார்க்கப்படுவதால் விவசாயிகள் கரும்பு, வாழை, பப்பாளி, கொய்யா, முருங்கை போன்ற பயிர்களுக்கு மண் அனைத்தல், முட்டுகொடுத்தல், விட்டம் கட்டுதல் போன்ற பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்க்கொள்ளவும். கொடிவகை பயிர்களில் பந்தல்களில் துருபிடித்து

கொடுக்கவும். பயிர்களுக்கு மருந்து தெளிக்கும் வேலைகளை ஒத்திவைக்கவும்.

அடுத்த 3 நாட்களுக்கு லேசானது முதல் மிதமான மழை எதிர்பார்க்கப்படுவதால் விவசாயிகள் தங்கள் விளை நிலங்களில் முறையான வடிகால் வசதியினை ஏற்படுத்தவும்.

நெல் வயல் மற்றும் இதர விளைநிலங்களில் போதிய வடிகால் வசதியினை ஏற்ப்படுத்தவும்

**எதிர்பார்க்கப்படும் வானிலைக்கேற்ற வேளாண் ஆலோசனைகள்**
**முக்கிய பயிர்கள் : வாழை, நெல், கால்நடை.**

**வாழை:**
வாழை பயிரில் மஞ்சள் இலைப் புள்ளி நோய் தாக்குதல் பரவலாக தென்படுகிறது. இதன் அறிகுறியாக, இலையின் இரண்டாம் நிலை நரம்புகளுக்கு இடையில் சிறிது நிறமாற்றம் ஏற்படும்.

ஒரு காலகட்டத்தில் இந்த புள்ளிகள் வெளிறிய மஞ்சள் கோடுகள், பழுப்பு நிற கோடுகள் மற்றும் நீள் வட்ட புள்ளிகளாக உருவாகி, இரண்டாம் நிலை நரம்புகளுக்கு இணையாக காணப்படும். இந்நோய் பாதித்த வாழையில் உள்ள இலைகள் கருகி உதிர்ந்து விடும். இந்நோயானது பயிர்களிடையே வேகமாக பரவும் தன்மையுடையது.

இதனைக் கட்டுப்படுத்த ஒரு லிட்டர் தண்ணீருக்கு 10 கிராம் சூடோமோனஸ் புளூரோசன்ஸ், 10 கிராம் பேசிலஸ் சப்டிலஸ், 10மில்லி பஞ்சகவ்யம், 5 கிராம் நாட்டு சர்க்கரை இவற்றை கலந்து நன்கு நனையுமாறு காலை அல்லது மாலை வேலைகளில் தெளிக்க வேண்டும்.

பயிர் பாதுகாப்பு நடவடிக்கைகளை மழை இல்லாத நாட்களில் மேற்கொள்ள வேண்டும்.

**நெல்:**
நெல் பயிரில் செம்புள்ளி நோய் தாக்குதல் பரவவாக தென்படுகின்றது. இந்நோய் நாற்றாங்காலின் நாற்றுப் பருவத்திலிருந்து நடவு வயலின் பால் பருவம் வரை இப்பூசணம் பயிரைத் தாக்கும்.

முதலில் இந்நோய் மிகச்சிறிய பழுப்புப் புள்ளிகளாகத் தோன்றும். பின் உருளை வட்ட வடிவப் புள்ளிகளாக மாறிவிடும். பின் பல புள்ளிகள் ஒன்று சேர்ந்த நிலையில் இலைகள் காய்ந்து விடும். இந்நோய் பழுப்பு நிறப் புள்ளிகளுடன் கதிர் மற்றும் கழுத்துப் பகுதியை தாக்கும்.
இதனைக் கட்டுப்படுத்த ஒரு ஏக்கருக்கு 500மில்லி என்ற அளவில் மெட்டோமினோஸ்ட்ரோபின் மருந்தினை தண்ணீரில் கலந்து தெளிக்கலாம்

பயிர் பாதுகாப்பு நடவடிக்கைகளை மழை இல்லாத நாட்களில் மேற்கொள்ள வேண்டும்.

**கால்நடை:**
தற்போது நிலவி வரும் குளிர்ந்த வானிலையின் காரணமாக, கால்நடைகளை, சூரியன் உதித்து 2 மணி நேரம் கழித்து மேச்சலுக்கு அனுப்ப வேண்டும்,

மாட்டு கொட்டகைகளை சுற்றி கோணி சாக்கு பை கொண்டு மறைத்து கட்டவும்,

கொட்டகைகளை ஈரப்பதம் இல்லாதது நன்கு உலர்ந்து இருக்குமாறு பார்த்துக்கொள்ள வேண்டும்.

கொடுக்க வேண்டும்.